ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2388/02 - 2024 ජූනි මස 10 වැනි සඳුදා - 2024.06.10

2388/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DNK/LND1/DEACQ/12/09.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/18/2016/HA/378.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் செந்திரியா முல்ல கிராமத்தில் அமைந்த நில அளவையாளர் நாயகத்தின் வரைபட இல. கடத்திரல் வரைபடம் 410509 மற்றும் 2024.02.28 ஆந் திகதியின் கடத்திரல் வரை படத்தின் காணித்துண்டு இல. 01 இனால் குறிப்பிடப் படும் 0.0065 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய செந்திரியா முல்ல வத்த எனும் காணித்துண்டின் விபரம் :

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர் : செந்திரியாமுல்ல வத்த;
உரிமை கோருபவர்: தென்னகோன் ஹலுகே ரொசலின்;
விஸ்தீரணம் : 0.0065 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு தங்கொட்டுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே.ஏ. விஜானி வசந்திகா,
பிரதேச செயலாளர்,
தங்கொட்டுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தங்கொட்டுவ,
2024, யூன் 05.

EOG 06 - 0072

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/MDB/4/2/1/248.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/18/2020/WS/97.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2363/06 ஆம் இலக்க 2023.12.18 ஆந் திகதியின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 3ஏ பக்கத்தில் குறிப்பிடப்பட்ட கடத்திரல் வரைபடம் 320896 இற்கு உரிய ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு இல. 01 இனால் குறிப்பிடப்படும் காணியின் விஸ்தீரணம் கீழ்க் குறிப்பிட்டபடி திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

காணியின் விஸ்தீரணம் : 0.2529 ஹெக்டயார்
(2 ரூட் 20 பேர்ச்)

நுவன் சீ. ஹேமகுமார,
பிரதேச செயலாளர்,
மெதகும்பர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மெதகும்பர,
2024, ஏப்பிறல் 30.

EOG 06 - 0073

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/1/கா/சுவீகரிப்பு/76.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/9/2013/WS/413.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2343/27 ஆம் இலக்க 2023.08.02 ஆந் திகதியின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட EOG 08 - 0019 அறிவித்தல், கீழ்க் குறிப்பிட்டபடி திருத்தப்பட வேண்டும் என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட உரித்து விசாரணைத் திகதி 2023.10.16 | திருத்தப்பட வேண்டிய விசாரணைத் திகதி 2024.07.08 |
| வர்த்தமானப் பத்திரிகையின் கடிதங்கள் ஒப்படைக்கும் திகதி 2023.10.02 | திருத்தப்பட வேண்டிய கடிதங்கள் ஒப்படைக் கும் திகதி 2024.07.01 |

டபிள்யூ.பீ.சீ.என். பதிரண,
பிரதேச செயலாளர்,
மல்லவபிட்டிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மல்லவபிட்டிய,
2024, மே 19.

EOG 06 - 0074

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ஹ/பிசெ/3/2/2/36(1).
(KDS/HAT/4/1/2/AQ/56)
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: எல்டீ/05/2008/எல்/249.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1760/45 ஆம் இலக்க 2012.06.01 ஆந் திகதியின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 13 ஆவது வரிசையில் குறிப்பிடப்பட்ட அளந்து பிரசுரிக்கப்பட்ட விஸ்தீரணத்தில் 0.0355 ஹெக்டயார் காணியின் விஸ்தீரணம் 0.0335 ஹெக்டயார் என திருத்தப்பட வேண்டும் என்பதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

டீ.எம்.கே.பீ. வீரசிங்க,
பிரதேச செயலாளர்,
ஹதரலியத்த.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹதரலியத்த,
2024, மே 31.

EOG 06 - 0075

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.